MCOP. 134/2024

நாள். 22.07.2025

ம.சா. 1 – கவிதா

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–

விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கும், அவரது குடும்பத்தார்க்கும் காயம் ஏற்பட்டு என் கணவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக 1ம் எதிர்மனுதாரரும், அவரது குடும்பத்தார்களும் இழப்பீடு கேட்டு மதுரை 4 வது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் என் மீது வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். விபத்தில் சம்மந்தப்பட்ட 1ம்எதிர்மனுதார் வாகனத்திற்கும், எனது வாகனத்திற்கும் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கு அருகில் அரசு மதுபானக்கடை உள்ளது என்றால் தெரியாது. என் கணவர் அந்த மதுபானக்கடையில் மது அருந்திவிட்டு தவறான வழியில் வந்தததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் என் கணவருக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. என் கணவருக்கு எவ்வளவு வருமானம் வந்தது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். போலிசாரால் தயாரிக்கப்பட்ட வரைபடம், பார்வைமகசரை ஆவணங்களாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த 2 ஆவணங்களும் என் வழக்கிற்கு விரோதமாக உள்ளது என்பதால்தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் ஓட்டிச் சென்ற எனக்கு சொந்தமான வாகனம் போக்குவரத்து வாகனம் என்றால் சரிதான். போக்குவரத்து வாகனத்தை ஓட்டுவதற்கு பேட்ச் வாங்கியிருக்க வேண்டும் என்றால் சரிதான். என் கணவர் பேட்ச் வாங்கியுள்ளார் என்பதற்கு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லைஎன்றால் சரிதான். நான் இழப்பீடு தொகையை மிகைப்படுத்தி கேட்டுள்ளேன் என்றும், 1ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

2ம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணை:–

விபத்து சம்மந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, நான் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லைஎன்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.13 வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் கணவர் அதிக

வாகனங்கள் வைத்து அதிக வருமானம் ஈட்டி வருவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு என் கணவர்தான் காரணம் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**4 மற்றும் 5ம் எதிர்மனுதாரர்கள் குறுக்கு விசாரணை:–**

4 , 5 எதிர்மனுதார்கள் என் கணவரின் பெற்றோர்கள் என்றால் சரிதான். என் கணவர்தான் அவர்களுக்கு மூத்த மகன் என்றால் சரிதான். என் கணவரின் தம்பி மனநலம் பாதிக்கப்பட்ட நபர் என்றால் சரிதான். மேலும் அவர் மாற்றுத்திறனாளி. என் மாமனார் மற்றும் மாமியார் வயதானவர்கள் என்றால் சரிதான். அவர்களால் வேலைக்கு சென்று வருமானம் ஈட்ட முடியாது என்றால் சரிதான். என் மாமனார் , மாமியாரும் என் கணவரின் வருமானத்தை சார்ந்து வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரிதான். என் மாமனார், மாமியாரும் இழப்பீடு தொகை பெற அருகதை உடையவர்கள் என்றால் சரியல்ல.

3ம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணை:–

என் கணவர் சொந்த வேலையின் காரணமாக வாகனத்தை எடுத்து சென்றபோது தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். TN 65 AS 3028 என்ற வாகனம் என் பெயரில் உள்ளது என்றால் சரிதான். இழப்பீட்டு மனுவில் என் கணவரின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர்தான் காரணம் என குறிப்பிட்டு மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையும், குற்ற இறுதி அறிக்கையும் என் கணவர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் 3ம் எதிர்மனுதார் காப்பீடு நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. அதனால் 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.